காவியம்

ஆசிரியர்: சுரதா

(கவிதை வார இதழ்)

சுவடி 1: ஏடு 12 | சென்னை: திருவள்ளுவராண்டு, 1987, மாசி 12 24—2—56 | விலை அணா 1

ஆணவத்தை அடக்கிய, இருபது!

இட்டதுதான் சட்டம்! எதிர்த்தால் இருபதிலே
சுட்டுவிடும் எங்கள் துரைத்தனத்தின் துப்பாக்கி.

தேவிகுளம் பீர்மேடு தேவை அவர்கட்கே,
கூவிப் பயனில்லை கோபத்தை மூட்டாதீர்.

நேரு மகான் தந்த நீதிதனை இங்குள்ள
ஈருளிகள் கூடி, எதிர்த்தால் விடுவேனே.

—காமராசர்.

ஃ ஃ ஃ

சென்னை மதுரை திருச்சி குகைசேலம்
பொன்னி நதிவளைந்து போகின்ற தஞ்சாவூர்;

நீல அலைகள் நிலையாக ஆடுகின்ற
கோலக் கடலூர்; கோவைநகர், வேலூர்;

திருவாரூர் தில்லை, திருக்குடந்தை போன்ற
பெருநகரில்—சிற்றூரில் பிப்ரவரி பத்திரண்டில்

சாலை தனிலுரிமைச் சத்தங் கொடுத்தபடி
வேலை நிறுத்தும் வினைபுரிந்தார்; வென்றிட்டார்

நாட்டு உணர்ச்சி நமக்குண்டு என்பதனைக்
காட்டினர் அன்று, கடையடைத்து, ஆங்காங்கே.

பூக்கடைகள் இல்லை; புகைசுருட்டுக் கடையில்லை
ஈக்கள்வந் துட்கார்ந்தெ மூந்திருந்துசெல்லுகின்ற

சிற்றுண்டிச் சாலை; தேநீர் நிலையங்கள்;
விற்கும் உணவு விடுதிகள் அத்தனையும்;

அர்த்தால் நடந்திட்ட அன்று முழுநாளும்
வர்த்தகம் இன்றி மவுனம் அடைந்தனவே.

கட்டிளைஞர் அன்றைக்குக் கல்லூரி செல்லவில்லை,
பொட்டிட்டு மையிட்டுப் பூச்சுமையைத்தாங்குகின்ற

மாணவிகள் அன்று வரமறுத்தார் கல்லூரி,
ஆணவத் தீர்ப்பென் றறிந்து!

நுனிக் கரும்பு நட்பு?

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீர மிலாளர் தொடர்பு!

—நாலடியார்.

சர்வகட்சி கூட்டணியின் நன்றி அறிவிப்பு

தலைவர் பி. டி. இராஜன் அவர்களின் அறிக்கை.

சர்வ கட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழ் நாடு எங்கணும் அர்த்தால் மிக வெற்றிகரமாக நடந்தேறியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக, சர்வ கட்சி கூட்டணியின் சார்பில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் உளம் பொங்கிய நன்றியையும், தமிழக மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். அர்த்தாலை வெற்றிகரமாக்கும் வகையில் பொதுமக்கள் அமைதியாகவும், கண்ணியமாகவும் நடந்துகாட்டியதும், போலீஸ் அதிகாரிகள் பொதுவாக நேர்மையாக நடந்து காட்டியதும் வரவேற்கத்தக்கனவாகும்

நாம் திரும்பத் திரும்ப அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிறகும், சில வேண்டத்தகாத அசம்பாவிதங்கள் சிற்சில இடங்களில் நடந்தேறியிருக்கின்றன; அத்தகைய இடங்களில் போலீஸ் அதிகாரிகளும் அத்துமீறி நடந்துகொண்டிருந்திருக்கின்றனர்.

சர்வ கட்சிக் கூட்டணியின் செயலாளர்களுள் ஒருவரான தோழர் பா. ஜீவானந்தம் அவர்களும், கம்யூனிஸ்டுத் தலைவர் எம். ஆர் வெங்கட்ராமன் அவர்களும், மக்களை வீதியிலிருந்து அமைதியாக அகற்றிக்கொண்டிருக்கும்போது, அவர்கள், போலீசாரால் தாக்கப்பட்டது, சர்வ கட்சிக் கூட்டணியினராகிய எங்களுக்கெல்லாம் மனவருத்தத்தைத் தருகிறது.

நிற்க, இந்த அர்த்தாலை வெற்றிகரமாகவும் அமைதியாகவும் நடத்தித் தந்த தமிழக மக்களின் சார்பிலும், கூட்டணியில் சார்ந்துள்ள என் சகாக்களின் சார்பிலும் கூட்டணியின் முடிவுகளை அரசியலாருக்கு மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

1. 'தட்சிணப் பிரதேசம்' ஏற்படுவதைக் கைவிட வேண்டும்.
2. எல்லையில் உள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழ் ராஜ்யத்துடன் இணைக்கப்படவேண்டும்.
3. புதிய சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடவேண்டும்.

என்ற கோரிக்கைகளைப் பரிபூரண ஹர்த்தாலின் மூலம் தமிழக மக்கள் வெளிப்படுத்திய உணர்ச்சியை அரசியலார் மதித்து, அதற்கேற்ப ஆவன செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்

இந்த கோரிக்கைகள் வெற்றி பெறும் வரையில் தமிழக மக்கள் எதிர்காலத்திலும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டுமென சர்வ கட்சிக் கூட்டணி சார்பில் நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை
21-2-56

பி. டி. இராசன்,
தலைவர்.

இதயம்

சென்னை 24—2—56 வெள்ளி

காமராசரின் எதிர்காலம்?

எட்டிக்கனிபோல் கசந்திடும் தீர்ப்பினை
இங்கு அளித்து விட்டீர்—எம்மைக்
கொட்டகை ஆடுகள் என்று நினைத்தனிர்
குட்டைக் கருத்தினரே!
வேலைநிறுத்தத்தின் மூலத்தினால்—எண்ண
வேற்றுமை காட்டி விட்டோம்—இங்கு
கூலி நினைப்பினி செல்லாது ஆட்சியின்
கூண்டு நொறுங்கி விடும்!

என்னமோ நினைத்தார்

எல்லைப் பிரிவினை இல்லை சரியாக
இப்பொழுதே திருத்தும்—என்றும்
நல்லமாட் டுக்கொரு சூடுஎன்பார் இந்த
நாட்டினை ஆள்பவரே!

இமயம்—பொதியம் — — — — இருதுருவங்கள்.

தமிழ்நாடு என்றுநீர், சென்னையை மாற்றுவீர்
தட்சிணம் தைக்காதீர்—வட
இமயம்—பொதியம்-தனித்தனி எப்போதும்
இரண்டையும் சேர்க்காதீர்.
இவ்வாறு வார்த்தை விளக்கங்கள் தந்தனர்,
இருபதாம் தேதியிலே—இனி
எவ்வாறு நம்காம ராசர் நடப்பு
இருந்திடப் போகிற தோ?

தீர்ப்பைத் திருத்திடச் செய்வாரா?

காங்கிரஸ் மேலிடம் செய்த தவறினைக்
காட்டித் திருத்து வரா?—இல்லை
மாங்கனித் தீர்ப்பிது என்றே தமிழர்க்கு,
வாயுரை ஆற்றுவரா?

ஆச்சாரியார் ஆகிவிடாதீர்!

செந்தமிழ் மக்கள் முடிவை மதித்தவர்
சிறப்பு அளிப்பாரா?—இல்லை
அந்தணர் ஆச்சாரி யாகி அவர்நிலை
அடைந்திடப் போகின்றாரா?

★

சொல் விளக்கம்—12

திரை

சுப்புரத்தின தாசன்

மாதவியும் கோவலனும் ஒருநாள், அந்தி
மாலையிலே, கடற்கரைக்குச் சென்று, வானச்
சீதநிலா வெள்ளிவட்டம் வரும்வரைக்கும்
தித்திப்புத் தனிக்கதைகள் பேச லானார்.
காதினிக்கப் பாடென்றான், நடன மங்கை,
கானல்வரிச் சங்கீதம் தந்தாள், பின்னர்,
கோதையவள் கையூன்றி எழுந்தாள்; முத்தம்
கொடுத்திடுவோன், கண்ஊன்றி எழுந்திருந்தான்.

நீலச்சா யம்அசைந்து ஆடு தற்கு
நிச்சயித்த பள்ளந்தான் கடல்என் றிட்டாள்.
மாலைநிறம் குடியிருக்கும் இடந்தான், ஒட்டு
மாங்கனியே! உன்கன்னம் என்றான்; அன்னோன்.
ஓலைமலர்த் தாழம்பூ அசைவ தாலே,
உயிர்மூச்சு மணக்குதென்றாள்; ஆமாம்! ஆமாம்!
காலைமலர்த் தாமரையே! பேசு! பேசு!
கற்கண்டுச் சரக்கேநீ பேசு! என்றான்.

திரைஎன்று அழைப்பதுஏன் அலையை? நீங்கள்
தெரிவிக்க வேண்டுமிதை அன்பே! என்றாள்,
நுரைக்கின்ற பசுப்பாலே! பொங்கல் நாளே!
நுட்பமுள்ள கேள்வியிது? சொல்லு கின்றேன்.
சரியான காரணத்தை அறிந்த பின்னர்த்
தரவேண்டும் தேன்முத்தம், என்ன?—என்று,
சிரித்தபடி காதலியைப் பார்த்துக் கேட்டான்.
திசைவிளக்கு—சம்மதித்தாள், நெருங்கி நின்றாள்!

திரைஎன்னும் சொல்லுக்கு—சுருக்கம்—என்று
செந்தமிழர் குறித்துள்ளார் பழைய ஏட்டில்.
நரைதிரைஎன் கின்றோமே—இதனைச் சற்று
நன்றாக எண்ணிப்பார், முடிவெ ளுப்பை,
நரைஎன்று அழைக்கின்றோம், கிழவ னாலல்,
நல்லஉடல் தோல் சுருங்கும்—அதனைப் பார்த்து,
திரைவந்து விட்டதெனக் கூறு கின்றோம்.
திரைஎன்றால் ஓர்பொருளின் சுருக்க மன்றோ!

பாத்திரத்துள் இருக்கின்ற தண்ணீர் போலப்
பணிவாக இருக்காமல், அசைந் தசைந்து,
ஆர்த்தெழுந்து தினந்தோறும் கடலின் தண்ணீர்,
அலையாகிச் சுருங்குகின்ற காரணத்தால்
கீர்த்திதரும் பேரறிஞர்—திரை—என் றிட்டார்.
கிளர்ந்துஎழுந் தண்ணீரின் சுருக்கந் தன்னை!
வார்த்தெடுத்த பொற்சிலையே, என்றான்; மங்கை
மதுரஇதழ் தந்திட்டாள்; ஒற்றித் தின்றான்!

நாஞ்சில் - - வள்ளுவன்

ஓ. எம். சுப்பிரமணியன்

வில்லெடுத்தோன்; வெற்றிபெற்றான் சேரன்; அந்த
வேந்தனுக்குக் கீழிருந்து ஆட்சி செய்த
நல்லறிவுத் திறம்படைத்த மகுட மன்னன்,
நாஞ்சில்வள் ளுவன்என்போன் — அவனைக் காணப்
பல்லிழந்த ஔவைத்தாய் — விறலிப் பெண்கள்
பலரோடு நாஞ்சில்நாட் டுக்குச் சென்றாள்.
கல்வியிலே காமமுற்றான்; சபைக்கு வந்த
கவிக்கிழவி தனைக்கண்டு மகிழ்ச்சி யுற்றான்!

தரணிதனில் ஒருபகுதி நிலத்தை ஆண்டோன்,
தமிழ்ப்பொழுது போக்கலுற்றான் ஔவை யோடு.
அரும்புநிகர் வாய்ச்சிரிப்பு அளிக்கும் அந்த
அன்னங்கள் விடுதியிலே தங்க லானார்.
ஒருவாரம் ஓடிற்று! மறுநாள் மாலை
ஓரிருவர் ஔவையொடு, கலப்பை நாட்டின்
நிருவாண நதியழகைக் காணச் சென்றார்.
நீலமலை நாட்டழகைக் கண்ணால் தின்றார்.

தங்கத்தின் ஒளிகாட்டும் விறலி மங்கை
தாமரைப்பூ எனும்பெயராள், விடுதிப் பக்கம்
செங்கீரை முளைத்திருக்கக் கண்டாள் ; கண்டு
செங்காந்தள் கைவிரலால் பறித்தாள்; பின்னர்
அங்கதனைச் செங்கமலம் சமைக்க லுற்றாள்,
அக்கீரை யொடுதுவரை தன்னைச் சேர்க்கச்
செங்கமலம் எண்ணமிட்டுக் கலயந் தன்னைத்
திறந்திட்டாள், அதில்துவரை அரிசி இல்லை!

கவிப்பாட்டி — மற்றவர்கள் — திரும்பி வந்தார்
காட்சிதனைக் கண்ணுக்கண்டு விட்டு!
சுவையான சொற்களிலே, எழிலி என்பாள்
தோகையிடம் மலைநதியைப் பற்றிச் சொன்னாள்.
இவையாவும் இருக்கட்டும் கீரை தன்னில்,
இடுதற்குப் பருப்பில்லை, என்றாள் தோகை!
குவிக்காதே இதற்காக உதட்டை — ஊன்று
கோலெங்கே? எடுஎன்றாள் ; எழுந்தாள் ஔவை.

கோலூன்றி பாண்டியனின் வில்லைப் போலக்
குனிந்தபடி நடைதந்து, — பகைவர் மீது,
வேலூன்றும் வேந்தனிடம் விரைந்து சென்றாள்.
வீற்றிருந்த முடிமன்னன், வந்த ஔவை
மேலூன்றி னான்விழியை; இருக்கை தந்தான்.
வீரர்களின் போர்ப்பேச்சை நிறுத்திக் கொண்டு,
பாலூறும் வார்த்தையினால், கவிதை பாடும்
பாட்டியிடம் விவரத்தைக் கேட்டான் வேந்தன்.

ஈரமழை தவறாது பெய்யும் நாடா!
என்னோடு வந்துள்ளோர், பறித்து வைத்த
கீரைதனில் இடுதற்குத் துவரை இல்லை;
கிளிப்பச்சை வயலோனே! என்று ரைத்தாள்.
சேரனொடு உறவாடும் வேந்தன் கேட்டுச்
சிரித்திட்டான்; பேசுதற்கு இதழ்தி றந்தான்.
ஆரங்கே யானை இங்கு வரட்டும் என்றான்.
அவ்வாறே கொண்டுவந்தான் யானைப் பாகன்.

சங்கைப்போல் தலையுடைய யானை மீது
தங்கநிறத் துவரைதனை ஏற்ற வைத்து
நங்கையர்கள் இருந்திட்ட இல்லம் நோக்கி
நடஎன்றான்; நான்குஉரல் நடந்த தாங்கே!
பொங்கிவந்த உணர்ச்சியொடு ஔவைப் பாட்டி;
புவியரசன் கொடைத்திறனைப் புகழ்ந்து பேச,
தங்கமயில் மாதொருத்தி—அனுப்பப் பெற்ற
தானியத்தைக் கீரையொடு சேர்த்தாள் வீட்டில்!

காட்சி தந்த கனகம்

காட்சி தந்த கனகம் என்னும்
இந்தக் கவிதையை எழுதிய கவிஞர்
உண்மை ஒளியான் என்றும் பெயரினர்.
பலநூல் கற்ற பண்டிதர்—புலவர்.
கல்லுக் கடவுளை கண்டனம் செய்திடும்
சுயமரி யாதைத் துணிவு பெற்றவர்.

ஃ ஃ ஃ

இந்த எண்சீர் விருத்த வரிகள்
அடுத்த வாரமும் அவசியம்
தொடரும் என்பதை தோழர்கள் அறிகவே!

வீதியிலே சென்றிட்ட விமலனென்பான்,
வெண்மாட மாளிகையின் சன்னலோரம்
சோதியெனும் அழகுநங்கை சொரூபந் தன்னைச்
சொல்லவொண்ணா நிலையினிலே கண்டு விட்டான்.
ஓதியநூல் பலவெல்லா மோர்ந்திட்டாலும்
உண்மையதாம் காதலுக்குப் பேதமுண்டோ?
சாதியெனுங் கரும்பாம்பு வாழும்நாட்டில்
சடுதியிலே கண்ணிரண்டு மொன்றிற் றம்மா!

செல்லுமிடந் தனைநோக்கி முன்னே கால்கள்
சேர்ந்துதடு மாறியது ; நடந்திட் டாலும்
அல்லலுறும் மனந்தானு மன்னா ளில்லில்
ஆவது தானென்னென்று பார்த்து நிற்கும்
மெல்லியதா மம்மனத்தை யிழுத்துப்போக்கி
மெதுவாகக் குறித்த செயல் செய்து மீண்டான்.
அல்லினிலே யவனுறங்கும் வேளை தன்னில்
அழகுநங்கைக் கண்ணெதிரே வந்துநின்றாள்.

கனவினிலே காட்சிதந்த கனகம் நேற்றுக்
கண்ணொளியால் கருத்தழித்த நங்கையாகும்.
நனவினிலே கண்டவந்த நங்கைதானும்
நம்கனவை யலங்கரித்தாள் ஆதலாலே
தினமினிநா மவளழகைச் செல்லுங் காலை
தெரிசிக்க வொருவாறு ஒல்லும் போலும்!
மனமேநீ கலங்காதே மகிழ்ச்சியுண்டு!
மாநிலத்து வோர்காலை சேர்வாயென்றான்.

மறுநாளும் வீதிவழி செல்லும் மைந்தன்
மங்கையவள் தன்னழகைக் கண்டு விட்டான்.
வெறுநாளாய் வாழ்க்கையது கழிந்திட்டாலும்
வேட்கையது கூடுமென்ற வெண்ணத்தோடு,
பொறுமனமே புத்தியினா லடைவாயென்று
போதித்து அவ்வழியே சென்றுமீண்டான்.
உறுதிபெறப் பலநாளு மொத்துப்பார்த்து
உளந்தேறிச் செய்வினைமே லூக்கங்கொண்டான்.

இந்தவிதம் இவர்காத லின்பா யிற்று?
இளம்பிறைபோல் வளர்ந்துவந்த நிலைமை யெண்ணிச்
சொந்தவன்பு இவளிடத்தி லுண்டாவென்று
சோதித்துப் பார்க்கசில சூழ்ச்சி செய்தான்.
சந்ததமும் அவர்வீட்டில் கூட்டங்கண்டு
தனித்தநாள் தனைத்தேடி காத்து நின்றாள்,
அந்தநாள் நீர்வேட்கை உண்டா? வென்று
அணுகியதைப் பெற்றுமிக அன்பாய் மீண்டான்.



நமது மேடை

கைதானோர் கணக்கு

இதுவரை ஆயிரம் பேர்க்கு மேலாக—
பெரும்பா லானோர் தி.மு, கழகத்
தோழர்கள் கைது செயப்பட் டுள்ளனர்
அவர்கள் பட்டியல் அடியில்வருமாறு :

கடலூர் :
ஏ.கோ விந்த சாமிஎம். எல்.ஏ
உட்பட நூற்றைம் பதுபேர் கைது.

கோவை ;
இராசமா ணிக்கம் உட்பட நூற்றுப்
பதின்மூன்று பேர்கள் கைது ஆயினர்.

சென்னை :
ஹர்த்தால் நிகழ்ச்சியில் கைதா னோர்தொகை
ஏறக் குறைய! நூறுபேர் இருக்கும்.

கோட்டாம்பட்டி :
கைது ஆனவர் கணக்கு யாதெனில்,
எண்பத் தைந்து என்பதை அறிக.

தேனி :
தடைஉத் தரவை எதிர்த்து அமைதியொடு
ஊர்வலம் சென்ற தோழர்கள்
அறுபத்து ஐந்துபேர் ஆயினர் கைது !

வாணியம்பாடி :
தி.மு. கழகச் செயலாளர் கைது.

பெரியகுளம் :
சர்வ கட்சிக் கூட்டணித் தலைவர்,
தி.மு. கழகத் தோழர் உள்ளிட்ட
ஐம்பது பேர்க்கு மேல்கை தாயினர்.

இடைப்பாடி :
இருபத்து நான்கு தோழர்கள் கைது.

சென்னிமலை ;
இருபத்து மூவர் கைது ஆயினர்.

தியாகதுருக்கம் :
தி.மு. கழகத் தோழர் உள்ளிட்ட
இரண்டு பத்துபேர் கைது ஆயினர்.

குடியேற்றம் :
தி.மு. கழகத் தோழர் உட்பட
இருபது தோழர்கள் கைது ஆயினர்.

திருச்செங்கோடு :
தி.மு. கழகத் தோழர் உள்ளிட்ட
பதினெட்டு தோழர்கள் கைது ஆயினர்.

நாமக்கல் :
தி.மு. கழகத் தோழர் ஐவரும்,
மற்ற எழுவரும் கைது ஆயினர்.

இராசிபுரம் :
பன்னி ரண்டுபேர் கைது ஆயினர்.

கோத்தகிரி :
தி.மு. கழகத் தோழர்பன் னிருவர்
கைது ஆயினர் என்பது கணக்கு !

பூந்தமல்லி :
பொதுப்படக் கைது ஆனவர் பத்துபேர்.

தலைஞாயிறு ,
கழகத் தோழர்கள் கைது பத்துபேர்.

கிருஷ்ணகிரி :
எட்டுத் தோழர்கள் கைது ஆயினர்.

குத்தாலம் :
அட்ட திக்குபோல் எட்டுபேர் கைது.

வேலாயுதம்பாளையம் :
தி.மு. கழகத் தோழர் உட்பட,
எட்டுபேர் கைதுசெயப் பட்டிருக் கின்றனர்.

லால்குடி :
கழகத் தோழர்கள் நால்வர் கைது.

தோட்டம்பாளையம் :
கழகத் தோழர்கள் மூவர் கைது.

செல்லப்பம்பட்டி :
முத்தமிழ் போல மூவர் கைது.

தாமரைக்குளம் :
தி.மு. கழகத் தின்செய லாளரும்;
சுரங்கத் தொழிலா ளர்சங்கத் தோழரும் ;
கைது செய்யப் பட்டிருக் கின்றனர்.

அரக்கோணம் :
ஏ.எல். சி.கிருஷ் ணசாமி உட்பட,
எழுவர் கைது செயப்பட் டுள்ளனர்.

செம்பனார்கோவில் :
தி.மு. கழகச் செயலாளர் கைது.

★

அரங்கேற்றம்

நாம் பிறந்தது

முல்லைப் பிறந்தது மணம் வீச—ஈர்பேன்
மேயும்பெண் குழலேறி வாடவல்ல !
செல்வர்நாம் பிறந்தது தமிழ்கற்க—புகழ்
செத்த இந்தியைக் கற்கவல்ல !

தென்றல் பிறந்தது குளிர்விளைவிக்க—புழுக்கம்
தந்துயிர் இனங்களை வாட்டவல்ல !
தென்னோர்நாம் பிறந்தது வீரம்பேச—பொய்
தூங்கும் புராணங்கள் பேசவல்ல !

பாதை பிறந்தது வழிகாட்ட—அது
பார்ப்பதற் கழகினைச் சேர்க்கவல்ல !
மேதைநாம் பிறந்தது இங்கேவாழ—நம்
மண்விட்டு வேறிடம் பிழைக்கவல்ல !

வெண்ணிலா பிறந்தது ஒளிவீச—ஈர
வெண்முகில் நுழைந்தோடி மறையவல்ல !
பண்பு பிறந்தது மானம்காக்க—வயிற்றுப்
பசிக்காக மானத்தை இழக்கவல்ல !

கோயில் பிறந்தது கலைவளர்க்க—செய்த
கல்சாமிக் கிடம்தந்து நிற்கவல்ல !
விடுதலை பிறந்தது வாழ்வதற்கே—காவித்
துணிபோர்த்து சந்நியாசம் காக்கவல்ல !

ஆறு பிறந்தது நிலம்பாய—வீணே
அலைகடல் சென்றோடிக் கலக்கவல்ல !
வீரர்நாம் பிறந்தது இனம்சேர—நம்மில்
வேற்றுமை காட்டிப் பகைக்கவல்ல !

இரவு பிறந்தது இருள் சேர்க்க—வெளிச்சம்
இட்டு அமைதியைக் கலைக்கவல்ல !
திராவிடர் பிறந்தது நாடாள—வந்த
தீயோருக்கு அடிமையாய் வாழவல்ல !

—இரா. பரமசிவம், பண்ணுருட்டி.

★

புது இனிப்பு

" அத்தான் நீர் படுசுட்டி ! உறங்கும் போது
அருந்திவிட்டீர் இதழமுதம், வெட்கம் ! சொந்த
சொத்தென்றால் இப்படித்தான் பித்தனைப்போல்,
சுவைத்திடுதல் சரியாமோ சொல்லும் என்றாள்"

" வித்தெடுத்த மாங்கனியே ! இரவின் துன்பம்
விரட்டவந்த இளமாதே ! கள்ளி நீதான்
நித்திரைபோல் இமைமூடி நடித்தும், உந்தன்
நீள் விழிகள் அதனுள்ளே நீந்த, என்னை

'முத்தம் தா' என்பது போல் முறுவலொன்று
முனை இதழில் நெளிந்தோட, மெல்வந்து
தித்திக்கும் உன்னுதட்டில் என்னுதட்டைச்
சேர்த்து விட்டேன், இதிலென்ன குற்றம் மானே!

தேனினிக்கும் உன்னிதழில் இன்று, முற்றும்
தெவிட்டாகபுது இனிப்பு ஏது" என்றேன்
மானெனிகர் மங்கையவள் வாய்திறந்து " இன்று
மங்காத தமிழ்க்கவிதை கற்றேன். அந்த

செந்தமிழ்ப்பா க்களில் சொட்டும் அமுதம், எந்தன்
செவ்வுதட்டில் தேங்கியதால் போலும்" என்றாள்.
" பைந்தளிரே ! புத்தமுதம் மீண்டும்" என்றேன்.
பரிமாறிப்பசி தீர்க்கப்பக்கம் வந்தாள்.

— தயாளன், புதூர்.

கவலை

கொத்தனார் உதவி யின்றி
கொஞ்சமும் செலவு மின்றிச்
வித்தகர் நெஞ்சிற் கூட
வீடொன்று கட்டி வாழத்
தொத்திடும் கவலை; பொல்லாத்
தொத்துநோ யொக்கும்; ஆனல்
எத்தனை முயற்சித் தாலும்
இளஞ்சிறார் இடமே நல்கார் !

கவலைகள் விண்ணிற் தோன்றும்
கணக்கிலா விண்மீன் போலாம்;
அவைகளிற் காதற் தோல்வி
அடைந்திடில் கவலை ; வாழ்வை
சுவையிலா தாக்கி நல்ல
சோறுநீர் மறக்கச் செய்து
தவியென தவிக்க வைத்தல்
தகுமுழு நிலவுக்கொப்பாம் !

கவலைகள் வருதல் நீங்கல்
கண்ணுடை மக்கட் கெல்லாம்
தவளைகள் தரையில் நீரில்
தங்கியே மாறி வாழும்
உவமையை உணர்த்தும் ; இன்ப
உளங்குளிர் மழலைப் பேச்சால்
புவிதனில் குழந்தை நந்தம்
பொல்லாத கவலை போக்கும் !

—சுப்பராயலு, பெரியகுளம்.

★

ஆசிரியர் சூழ்ச்சிகள் !

நண்பா கேள்நீ நான்செப் புங்கதை !
தண்டமிழ் மக்கள் தகைவிலா ஆரியர்
சூழ்ச்சிக் காளாய் சுமந்தனர் இன்னல்
தாழ்ச்சி யுற்ற தமிழரை விழிப்புறச்
செய்யத் தோன்றினர் சான்றோர் அநேகர்
ஐயகோ! என்னென் றுறைவேன் அன்னவர்
குஞ்சித் தலையோர் குலத்தவர் மாக்களால்
வஞ்சக வலையில் வீழ்ந்த விந்தையே !

நந்தன் என்றொரு நல்லோன் தோன்றினன்
அந்தணர் அவனை அழைத்து ஏகியே
நாதன் அடியினை நண்ணுவாய் என்றே
நீதது உயர்வு தாழ்வு என்று
பேதம் நீக்கிய பெரியனைத் தீயில்
வேதம் ஓதிடும் வேதியர் தள்ளினர் !

சுத்தத் தமிழராம் சமணர் ! குலமதப்
பித்துப் பிடித்தப் பேயர் அவர்களை
வழுவினர் தங்கள் வாதில் என்றே
கழுவில் ஏற்றியே களித்தனர் நன்றாய் !

வள்ளலார் என்றொரு அறிஞர் தோன்றினர்
கொள்ளை யிட்டிடும் கூட்டத் தினரால்
குகையில் தள்ளியே கொன்றனர் அவரை !

வகையிலா நம்மவர் வதைந்தனர் இவ்விதம்
வாழ்ந்த தமிழர் வீழ்ந்தது ஏனோ !
தோழா ! அறைநீ அறைநீ! உணர்ந்தே !

—பார்த்திபன். அணவை.

★

பாண்டியனார், மூன்றாவது ஆண்டு நினைவு விழா.

22—2—56ல் பட்டி வீரன் பட்டியில்

மறைந்த நமது மாவீரர் பாண்டியனார்
நினைவு நாள்விழாநடைபெறும் சிறப்பொடு
அந்த விழாவில் ஆசைத் தம்பி
பொன்னம் பலனார், புகழ்மதி யழகன்
அனைவரும் பேசுவர் அங்கே
அந்தி மேற்கு ஆகாயப் பொழுதிலே !

எஸ். வையாபுரி(பிள்ளை) காலமானார்

பேரா சிரியர் வையா புரிபிள்ளை
அறுபத் தெட்டாம் ஆண்டில்—காலை
பதினொன் று ஐம்பது மணிக்கு,
காந்தி நகரில் காலமா னாரே !

ஆசிரியரும், வெளியிடுபவரும்:—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ்,
19, ஆலந்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-7
[ஆண்டு சந்தா ரூ. 4. ஆறு மாதம் ரூ. 2.]